

நகர் ஊரமைப்பு துறை - திருநெல்வேலி மாவட்டம்
மேலச்செவல் பேரூராட்சி

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், மேலச்செவல் பேரூராட்சி, மேலச்செவல் கிராமம் - 2, சர்வே எண்: 617/3B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லாத பகுதி)

அளவு : 1:400 | இணையதள விண்ணப்ப எண்: YJFSIK9I | வ

குறிப்பு

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	-	5850.00 ச.மீ. (1.45 ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்கு பரப்பு	-	1840.49 ச.மீ.
மீதமுள்ள இடத்தின் பரப்பு	-	4009.51 ச.மீ.
கோரிய மனைகள்	-	30
ஒதுக்கிய மனைகள்	-	30
மனைப்பிரிவு இடத்தின் எல்கை		
நிலையில் உள்ள சாலை		

பொது ஒதுக்கீடுகள்:-

மேலச்செவல் பேரூராட்சி மற்றும் மின் வாரியத்துக்கு தானப்பத்திர எண்: 74/2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி

i) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்கு பரப்பு	-	1840.49 ச.மீ.
ii) Ⓐ பொது உபயோகம் - (TANGEDCO) ஒதுக்கீடு பரப்பு	-	31.38 ச.மீ (0.78%)
iii) Ⓑ பொது உபயோகம் - (PUBLIC PURPOSE) ஒதுக்கீடு பரப்பு	-	28.58 ச.மீ (0.71%)

iv) TNCDBR-2019 விதி 47(6)-ன் படி பூங்காவிற்கு 400.951 ச.மீ. பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ. 20100/- நாள்: 08-02-2024-ல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு - 7.20மீ,9.00மீ,10.00மீ மற்றும் 12.00மீ சாலைக்கு - 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை (நிலை) எண் : 134, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை நாள்: 20.09.2002 மற்றும் அரசாணை (நிலை) எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 19.12.2020-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோகம் ஆகியவற்றின் நிலப்பரப்பினை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் மனுதாரர் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதியினை உள்ளாட்சி பெயருக்கு உட்பிரிவு செய்யப்பட்டு, தார் சாலைகள் அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்றும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்பட வில்லை எனவும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

ம.வ/திலிமா.ந.ஊ.எண்: **SWP/ 16 / 2024**

மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்

Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2024.02.29 14:27:50